**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.**

**அசல் வழக்கு எண். 30/2022**

2026ஆம் ஆண்டு மார்ச் மாதம் 12 ஆம் நாள் வியாழக்கிழமை சாட்சியாகிய மனோகரன் **PW1.** இன் வாக்குமூலம், 2023ஆம் ஆண்டு பாரதிய சாக்ஷிய அதிநியம் சட்டப்பிரிவுகளின் விதிமுறைகளின்படி **திருமதி. P.கனிமொழி, L.L.M.,** மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், தரங்கம்பாடி அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

தேதி : 12.03.2026

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : | மனோகரன் | | |
| Father /Husband Name | : | தங்கராசு | Court | : |
| Village | : | தலச்சங்காடு | Taluk | : |
| Calling | : | | | |
| Age | : | 63/2026 | | |

சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

**முதல் விசாரணை:**

நான் இவ்வழக்கின் வாதியின் கணவர் மற்றும் வாதி தரப்பு 1வது சாட்சி ஆவேன். வாதிக்கு உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் அவரால் நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகி சாட்சியம் அளிக்க இயலவில்லை. எனக்கு இந்த வழக்கு விபரங்கள் அனைத்தும் தெரியும் என்பதால் நான் வாதிக்காக சாட்சியம் அளிக்கிறேன். வழக்கு விபரங்கள் குறித்து முதன்மை சத்தியபிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். சத்திய பிரமாண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள விபரங்கள் அனைத்தும் உண்மைதான். சத்தியபிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான்.

| எண். | தேதி | ஆவணங்களின் விபரங்கள் |
|---|---|---|
| 1 | 14.02.2020 | வாதியின் கணவர் பிரதம மந்திரி காப்பீடு திட்டத்தின் கீழ் பயிர் காப்பீடு செய்த ரசீதின் கணினி நகல் **வாசாஆ 1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. |
| 2. | 11.02.2021 | வாதியின் கணவர் பிரதம மந்திரி காப்பீடு திட்டத்தின் கீழ் பயிர் காப்பீடு செய்த ரசீதின் கணினி நகல் **வாசாஆ 1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. |

மேலும் ஆவணங்கள் குறியீடு செய்வதற்காக வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கு இணங்க முதல் விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.